348.
22 AUG 1945 MADRAS

Reg. M. 2330. "SIDDHANTHAM" Vol. 18. No. 8

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

| மலர் 18 | பார்த்திபளு ஆவணிமீ 1945ளு ஆகஸ்டுமீ | இதழ் 8 |
|---|---|---|

சைவ சித்தாந்த மகா சமாஜம்
51, தென்கூர் செல்வ விநாயகர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை

ஆண்டுச் சந்தா ரூபா 2 தனிப் பிரதி அணா 3

## சைவமும் தீண்டாமை விலக்கும்

சைவம் என்பது முதலில் சிவசம்பந்தம் என்னும் பொருள் தரும்; பின்பு அது அச் சம்பந்தத்தை உயிர்கள் உணரும் நெறியைக் குறிக்கும். "சைவம் சிவனுடன் சம்பந்தமாவது" என வரும் ஐந்தாம் தந்திரத் திருமந்திரம், சைவம் என்பது சாயுச்சிய அநுபவத்தில் ஒரு திறம் என்று உரைக்கும். இவ்வநுபூதியைத் தாவல்ல சைவசமயத்தின் உட்பிரிவுகளையும், நாற்பாதங்களையும் அத் தந்திரம் விரித்துரைக்கின்றது. அதனுள் பின்வரும் மந்திரம் இரண்டிடங்களில் வருகின்றது:—

"சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறிச் சன்மார்க்கம் சேர்ந்துய்ய
... துளார்க்கு வகுத்துவைத் தானே"

JL
RBB 2211/N2851
N45 18.8
189801

...வன் நந்தெய்வச் சிவநெறியை வையகத்தார்
...குத்து வைத்தான் என்பது பெறப்படும்.
...கு அம்மையப்பர்". "தென்னுடைய சிவனே

எந்நாட்டவர்க்கும் இறை"வன். ஆதலால் அவனை அடைய அவன் வகுத்தநெறி மக்கள் அனைவர்க்கும் உரியதே என்பது தேற்றம்.

எனவே, இயம நியம ஒழுகலாறுகளும், சரியை கிரியை முதலிய ஞானசாதனங்களும் யாவர்க்கும் பொதுவுரிமைப்பொருள்களாய் உள்ளன. அவரவர் தத்தம் தவத்தின் பயனாய்த் தாம் உள்ளூற விரும்பும்படியில், பிறரால் தடைசெய்யப் பெறாது, நின்று பயின்று, ஞானத்தால் வீடடைதற்கு எவரும் உரியர், தெய்வம் அருளிய இப் பொதுவுரிமையைச் சிலர் பிறப்பாற் சாதி பேசிக்குறைக்கவும் தடுக்கவும் முயன்றுவந்துள்ளனர்.

சமுதாய நன்மையொன்றையே நாடி இப்பிரிவினை செய்யப்பட்டதென்றும், நால்வகைச் சாதிகளுள் உயர்வு தாழ்வென்பது இல்லவே இல்லை என்றும், பக்தி ஞானங்கட்கு யாவரும் உரியர் என்றும் வடநூல் வல்லார் சமாதானம் சொல்லுவர். ஆயினும். இக்காலத்து வாழ்க்கை முறையில் சாதிப் பாகுபாடு இச்செவ்விய நிலைமையில் அமைந்திருக்கவில்லை என்பது வெளிப்படை.

நம்நாட்டு நால் வருணங்களின் தோற்றமும் வளர்ச்சியும்பற்றி ஆராய்ச்சிவல்லார் பலவாறு கூறுவர். அவ்விரிவைச் சுருக்கிக் கூறவும் இங்கு இடமில்லை. தீண்டாமையைப்பற்றி மட்டும் இரண்டொரு குறிப்புக்கள் தரலாகும். நான்கு வருணங்களின் கலப்பால் பல சாதிகள் தோன்றின. இவைகளுள், பிராமணப் பெண்ணுக்குச் சூத்திர ஆணினால் பிறப்பவர்மட்டுமே சண்டாளர் என்று பேரிடப்பட்டு, பேரிழிவிற்குள்ளாய், தீண்டாதவர் என்று ஒதுக்கி ஒடுக்கிவைக்கப்பட்டனர் என்று மிருதிகளால் தெரியலாகின்றது. ஏனையவர்களை இவ்வளவு கடுமையாய் ஆதியில் நடத்தினதாகத் தெரியவில்லை. இச் சண்டாளரேயன்றி, மிலேச்சர் என்பாரைப் பற்றியும் படிக்கின்றோம். மிகக் குறைந்த நாகரிகமுடைய காட்டுமிராண்டிகளும், பிற நாட்டாரும் மிலேச்சர் என்னப்பட்டவர்களே. இவர்களும் தீண்டப்படாதவர்களாகவே யிருந்தார்கள். ஆயினும், இடைக்காலத்தில் பிற நாட்டார் பல்லாயிரவர் இந்நாட்டிட் புகுந்து வெற்றியுடன் குடியேறியபின் அவர்களையும் வடவர் தம் நால்வகைச் சாதிகளிற் சேர்த்துக்கொண்டு தீண்டாமையை ஒழித்துவிட்ட செய்திகளும் உண்டு.

கலப்புச் சாதிகளைப்பற்றிப் பேசும் மனுநூல்தானும் ஐந்தாவது வருணமென்று ஒன்றில்லையென்றே அறையும். பகவத்கீதையும் நால் வருணத்தைமட்டுமே குறிக்கின்றது. எனவே, வடவர் கோட்பாட்டின்படி யும் பஞ்சமர் என்றொரு சாதியார் முற்காலத்தில் இருந்ததாகத் தெரி[illegible] இப்பொழுது காணும் நம் ஆதிதிராவிட சகோதரர்களைப் பஞ்சம[illegible]



ரென றழைப்பதே தவறாகும். அதனினும் கொடிய தவறும் பொய்யுமாகும் அவர்களைச் சண்டாளர் என்று கூறுவது. **காவியகண்ட கணபதி சாஸ்திரியார்** என்னும் வடநூல்வல்ல அறிஞர், சண்டாளன் என்னும் சொல் ஒரு சாதியைக் குறிக்காது என்றும், சண்டாளத்துவம் என்னும் ஒரு தோஷத்தையுடையான் எவனையும் குறிக்கும் என்றும், அது வந்து நீங்கும் தோஷமே என்றும் கருதுகின்றார். திவான்பகதூர் - கே. எஸ். **இராமசாமி சாஸ்திரியார்** என்னும் பேரறிஞரும், தீண்டாமை என்பது சரித்திரகாலத்தில் வந்துசேர்ந்த இடைப்பிறவரல் என்றும், அதை விட்டொழிக்க வேண்டுமென்றுங் கட்டுரைக்கின்றார். இத்தீண்டாமை முன்னாளில் எப்படித் தோன்றியிருப்பினும் இருக்கட்டும். இன்றும் அவ்வெளிய தமிழ் மக்களைத் தீண்டா வகுப்பினர் என்று இந்துக்கள் எண்ணி ஒதுக்கி ஒடுக்கிவைத்திருப்பது எல்லா வகையாலும் அருவருத்துக் கண்டிக்கத்தக்க செயலேயாகும். இக்கொடிய மனப்பான்மை இந்நாட்டில் தோன்றி வளர்ந்த காரணத்தால் நாடு பல நூற்றாண்டுகளாய், ஒற்றுமையையும் சுதந்தரத்தையும் இழந்து பிற நாட்டார் ஆளுகைக்குட்பட்டுச் சிறுமையுற்றுள்ளது. இவ்வழக்கம் சமயத்தின் பேராலும் சாத்திரத்தின் பேராலும் பிழைத்துவரினும், உண்மையில் இது சைவ சமய அடிப்படைத் தத்துவத்திற்கு முற்றிலும் முரணான அநீதியேயாகும். பிறப்பில் தீண்டாமை பேணும் பிழைபாட்டுணர்ச்சி பெரியதோர் உண்மையை மறந்ததனால் பிறந்ததென்னலாம். இவ்வுண்மை யாது? அடியில் வருவனபோன்ற ஆன்றோர் திருவாக்குக்களில் அது துலங்கும்.

(1) "**எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி**" (அப்பர்) (2) "**தாய்தந்தை பல்லுயிர்க்கும் தாமேயாய தலைவர்**" (அப்பர்) (3) "எவ்வுயிரும் பராபரன்சந் நிதியதாகும்; **இலங்குமுயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்**" (சிவஞானதீபம்); (4) "**எல்லா வுயிரும்** எனதுருவே என்றுரைத்து, நல்லார் இனத்தில் நடித்தானைச் சொன்னாரார்" (சிற்றம்பல நாடிகள் சாத்திரக்கொத்து). (5) "சாதியொன்றுயர்ந்தது தாழ்ந்ததொன்றெனப், பேதமே வல்லாராய்ப் பிதற்றுவார் சிலர், சோதியே அநாதியாய்த் துன்னிநின்றமை, போதியாமையில்வரும் புன்மை யாகுமே." (சிவ மெய்ம்மொழி).

எவ்வுயிரிலும் இறைவன் தங்கியுளன். எவ்வுடம்பும் ஈசன் கோயில். எம் மனிதனும், முன்னைத் தவம் போதியவளவு முதிர்ந்திருப்பின், ஒரு பிறவியிலேயே சிவனடி சேரலாகும். இச்சைவ வுண்மைகளை என்றும் மறவாதிருப்போமாயின், எம்மனிதனையும் இழிவாக

னையோம்; நடத்தோம். எந்த மிருதி என்ன சொல்லினும் என்ன? இவ்வடிப்படையான ஞான உண்மைக்கும் ஒழுகலாற்றிற்கும் மாறான விதிகளை எவர் சொல்லியிருப்பினும் அவ்விதிகள், நல்லோரால் ஏற்கப்படா. மற்றுமோருண்மையையும் நூல்கட்குப் பெருமதிப்புத் தருவோர் கருதற்பாலர். ஆன்றோர் ஆயிரமாயிர மாண்டுகட்குமுன்பு அருளிய நூல்கள் அனைத்தும் அவர்கள் எழுதியபடியே இப்போதில்லை. "மெய்யொடே பொய்யும் விரவிமொறு பன்னூலுள் கையராபவர் பலநுழைத்தார்"என்று **பாம்பன் அடிகள்** கண்டு வருந்திப் பாடியுள்ளார். அன்றியும், சமுதாயத்தில் காலப்போக்கில் நிகழும் மாறுதல்களைக் கருதி, அவ்வக்காலத்து ஆன்றோர்கள், மிருதி விதிகளை அவசியமானபடி திருத்தியும் புதுக்கியும் அமைத்துக்கொள்ளலாம் என்னும் கொள்கை பெரிய வைதிகர்கட்கும் உடன்பாடானதே. எனவே, இடைக்காலத்து வந்துசேர்ந்ததும், இக்காலத்துக்குச் சிறிதும் நியாயமற்றதும், நாட்டின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்திப் பாவத்தை வளர்ப்பதும் ஆகிய தீண்டாமை என்பதைப் புதுமை நிறைந்த இவ்விருபதாம் நூற்றாண்டிற் கைவிட்டே தீரல்வேண்டும்; ஞான சாத்திர உண்மைகட்கு மாறுபடாத சமுதாய ஒழுகலாற்றுச் சட்டங்களை, உலகமெல்லாம் ஒரு பெருங்குடும்பம் என்னும் புத்துலக உணர்ச்சிக்கேற்ப அமைத்துக் கொள்ளல்வேண்டும்.

வெறும் பிறப்பால் உயர்வுதாழ்வு பாராட்டுவதை நம் சமயகுரவர்கள் தம் போதனையாலும் சாதனையாலும் கண்டித்துள்ளனர். "சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்! கோத்திரமும் குலமுங்கொண்டென் செய்வீர்?" என்ற அப்பர் திருவாக்கும், "சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி" ஏன்னும் மணிவாசகமும் பல அன்பர்கள் மனத்தில் உடனே எழலாம். அவ்வாறே, "நல்ல குலமென்றும் தீய குலமென்றும், சொல்லளவல்லாற் பொருளில்லை"; 'ஆக்கும் அறிவானலது பிறப்பினால், மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க" என்பனபோன்ற பல நீதிநூல் வாசகங்களும் நினைவிற்கு வரலாம். பண்டைத் தமிழகம் தன் சுயநிலையில் இருந்தபோது இந்நெறியைத் தான் கடைப்பிடித்துவந்தது. தீண்டாமை நச்சு நாட்டைத் தீண்டிவிட்ட பிறகும், சைவ வைணவ சமயகுரவர்களும் பிற அநுபூதிமான்களும் சமயத்திற் சாதி பாராட்டாமலே நடந்து காட்டினார்கள். திருநாளைப் போவாரையும் திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் சேர்த்தெண்ணி, 'ஆதிசைவ அந்தணப் பெருந்தகையாம் சுந்தரமூர்த்திகள் எல்லாச் சாதி நாயன்மார்கட்கும் தம் அடிமைத் திறம் கூறியிருப்பதை அறியாதார் யாரே! அங்ஙனமே திருப்பாணாழ்வார் பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒருவராய்த் திகழ்வதும் தமிழகம் நன்கறிந்ததே. "தீண்டா வகுப்"பில் அவதரித்த இவ்விருவரையும் ஆலயங்களில் வைத்து அவர்களுட் சாதிபேதம் கருதாது நால்வருணத்தாரும் இன்றும் வணங்கிவருவது கண்கூடே. திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் திருஞானசம்பந்தர் தமது யாத்திரைகளிலெல்லாம் உடனழைத்துச் சென்று தமது தேவாரப் பாசுரங்களை அவர் யாழிலிட்டுப் பாடக்கேட்டு இன்புற்றதும், மறையோராகிய திருநீலநக்க நாயனார், சம்பந்தப் பெருமானைத் தமதூரில் வரவேற்றபோது, பாணனாரும் அவர் மனைவியாரும் தமது "நடுமனை வேதியின் பாங்கர்"த் தங்க இடங் கொடுத்ததும், குலச்சிறையாரது அடியார்பத்தியை "நாடறிகின்ற குலமிலராகக் குலமதுண்டாகத் தவம்பணி குலச்சிறை" என்று பாலறாவாயர் பாராட்டியதும் அப்பெருமானது—"நான்மறை நாவன்ஞான சம்பந்த"னது—திருவுளப்பாங்கை இனிது புலப்படுத்தும். உண்மைச் சைவர்க்குத் 'தீண்டாதார்' எவரேனும் உளரோ என்னும் வினாவிற்கு, "சிவம் வேண்டாதாரை நாளும் தீண்டேன்" என்னும் திருவாசகத்தில் விடையுள்ளது. இத்தீண்டாமை, சாதியையோ உடம்பையோபற்றி நிற்பதன்று. தில்லைவாழந்தணருள் ஒருவராகிய உமாபதிசிவனார், சிற்றம்பலவர் திருவாணையின்படி, "தீண்டாச் சாதி"ச் சிவனடியாராகிய பெத்தான்சாம்பானுக்குத் தீக்கைசெய்து முத்தியிலே வைத்த அருஞ்செயல் சைவ நன்மக்கள் அறிந்துள்ளதொன்றே. நம் தெய்வச் சைவமாநெறித் தலைவர்கள், பிறப்பாற் பெருமை சிறுமை பேசும் மிருதி நூல்களைக் கீழ்ப்படுத்தொதுக்கி அப்பாற் சென்று அன்புநெறி பேணினர் என்பதற்கு இச்சான்றுகளே சாலும்.



நம் சமயகுரவர்கள் தங்கள் காலத்தில் தீண்டாமைப் பிறழ்பாட்டுணர்ச்சி வேரூன்றி யிருந்ததைக் கண்டு, அதை அறவே மாற்றும் அரிய உபாயமொன்றை நமக்குக் காட்டியருளினர். அதனைக் கையாண்டால், தீண்டாமையின் மூலத்தையே அகழ்ந்தெறிந்துவிடலாம். அது யாது? 'தீதகல வந்தருளும் திருஞான சம்பந்தர்' சிவச்சோதியில் கலந்து மறையுமுன் அருளிச் செய்த **நமச்சிவாயத் திருப்பதிகத்தில்** அதனைக் காணலாம்.* **திருவைந்தெழுத்தைச் சேரிகட்குக் கொண்டுபோய்,**

* (1) "கொல்லாரேனும் குணம்பல நன்மைகள், இல்லாரேனும் இயம்புவராயிடில் எல்லாத் தீங்கினும் நீங்குவர் என்பரால், "நல்லார் நாமம் **நமச்சிவாயவே**".

(2) "மந்தரம்மன பாவங்கள் மேவிய, பந்தனையவர் தாமும் பகர்வரேல், சிந்தும் வல்வினை, செல்வமும் மல்கு[illegible] நமச்சி**வாயவே**".

18980

'தீண்டாதார்' வாழ்வை அது தீண்டுமாறு செய்தலே அவ்வுபாய மாம். "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில், அவர் கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே". என்ற அப்பர் கோட்பாடும் இதனை வலியுறுத்தும். "வருணநெறி, சார்மதத்து (இறும்)" என்று அவிரோதவுந்தியாரும் அறைகின்றது. இம்முறை அக்காலத்துக்கு மட்டுமென்று, இக்காலத்துக்கும் பொருந்துவதே யாகும்.

'ஐந்தெழுத் துபதேசம் பெறுதற்கு வேண்டிய ஆசாரமும் தகுதியும் எளிய சேரிமக்கள்பால் இல்லையே! எங்ஙனம் அதை உபதேசிப்பது? என்றோர் ஐயம் நிகழலாம். ஒளி நுழைந்தாலல்லது இருள் போமாறு இல்லை. அதுபோல், சிவமந்திரம் புகுந்தாலல்லது தீமை விலகாதென்க. அதனில் முழுவதும் உறைத்து நிற்பதை ஆரம்ப தசையில் எதிர் பார்த்தல் அடாது. அவரவர்க்கு இயன்றவளவு அதனோடு நாடோறும் பழகிவந்தால், அதுவே அவர்களைப் படிப்படியாய்த் தூய்மைப்படுத்தும்; "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி"த் தன்னை ஓதக் கற்பிக்கும்; தன்னைப் பற்றினோரை மேனெறிக்குக் கொண்டுசெல்லும். "அல்லலாக ஐம்பூதங்க ளாட்டினும், வல்லவாறு '**சிவாயநம**' என்று, நல்லம் மேவிய நம்பனையுள்கிட வெல்லவந்த வினைப்பகை வீடுமே" என்னும் **அப்பர்** அருண்மொழி, ஆன்மபரிபாகத்தில் ஆசாரத்தில் - எவ்வளவு தாழ்ந்தவரா யிருப்பவர்க்கும் ஊக்கமும் நம்பிக்கையும் அளிக்க வல்லது.

மற்றுமோர் ஐயமும் தோன்றலாம்: 'ஐந்தெழுத் தோதலால் ஆன்ம சுத்தம் வளரலாம்; ஆனால் சேரியில் செல்வமும் கல்வியும் இதனால் சேருமாறுண்டோ?' என்பது. "பொன்னும், மெய்ப்பொருளும், போகமும்" ஒருங்கு வளரும்; 'ஐயுற வேண்டா ஒன்றும்'. மேலே காட்டிய **நமச்சியவாயத் திருப்பதிகத்தில்** "செல்வமும் மல்குமால்", என்று வாக்குறுதி தரப்பட்டுள்ளது. 'சிவம்பெருக்கும் பிள்ளையா'ரது இத்திருவாக்கு வீண்போகாது; சிறிது உற்று நோக்கினும் இதன் உண்மை புலப்படும்; விரித்துரைக்க இடனின்று. சமுதாயத்தில், தீண்டாதார்க்குப் பெருமதிப்பை உண்மையில் தேடித் தரவல்ல சிறந்தவுபாயம் பிறிதொன்றில்லை. 'சிவன்எனு மொழியைக் கொடிய சண்டாளன் செப்பிடினும் அவனோடு உண்க, அவனோடு உறைக' என்று **மூண்டகோபநிடதம்** முழங்குவதாக **மாதவச் சிவஞானயோகிகளும்** ஆமோதித்து ஆர்வத்துடன் அறிவுறுத்துகின்றார்கள்.

ஆதலின், தீண்டாமையை ஒழிக்கச் சிவபக்தியை வளர்த்தலும், அதற்காக இடைவிடாது முனைந்து நின்று கட்டுப்பாடாகக் கொண்டு



செய்தலும் சைவர் கடமையாகும். அரசியல் செல்வாக்கைக் கொண்டு, ஆதித்திராவிடர்க்குக் கல்வி, செல்வம், செல்வாக்கு இவற்றில் சம உரிமை மேன்மேலும் கொடுக்க ஒருபுறம் முயலல்வேண்டும். அதனோடு, அவர்கள் ஆன்மபரிபாக முதிர்ச்சிக்கும் நேர்முறையில் வழிகோலல் வேண்டும். இப்பணியை அரசாங்கம் செய்ய இயலாது. சிவாலயங்களும், சைவ மடங்களும், சைவச் சபைகளும் இப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளல்வேண்டும். முதலில், தமிழகத்தைச் சமயப்பணிக்காகச் சிறுசிறு வட்டங்களாகப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு சமய போதகரை நியமித்தல்வேண்டும். இவர் அவ்வட்டத்தில், ஒரு ஒழுங்குக்கு உட்பட்ட முறையில் சமயபோதனை செய்துவரல்வேண்டும். இப்போதகர்களுக்கு வேண்டிய பயிற்சி யளிப்பதற்கென்று கோயில்களும் மடங்களும் சேர்ந்து இரண்டொரு சாத்திரக் கல்லூரிகளை அமைத்தல் வேண்டும். இவைகள் அடியோடு பழைய முறையில் பழைய நூல்களை மட்டும் கற்பிப்பது போதாது. இருபதாம் நூற்றாண்டின் இயல்பையும் தேவையையும் அறிந்து, ஊரிலும் சேரியிலும் பயனுள்ள சமய போதனை செய்ய மாணவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். இவர்களுக்கு இத்தகுதியை உண்டாக்குவதோடு, சிறுநோய்கட்குத் தமிழ் மருந்துகள் செய்து அளிக்கும் திறமையையும் உண்டாக்குதல் நலம். சமயபோதனை செய்வதோடு, ஆங்காங்கு திக்கற்ற ஏழை மாணவர்கட்கு இல்லங்கள் அமைத்துக் கல்வி கைத்தொழில் சன்மார்க்கம் இவைகளைப் போதிக்க இனி இந்துக்கள் முன்வரல் வேண்டும். அவ்வாறே, சேரிகளிலும் சிற்றூர்களிலும் தரும வைத்தியசாலைகளையும் ஏற்படுத்தல் வேண்டும். அவ்வவ் வட்டச் சமயபோதகர்கள் இவ்விருவகைத் தொண்டுகளை மேற்பார்வையிடவும், இயன்றவளவு தாமே இவற்றிற் கலந்துகொண்டு பணி செய்யவும் வல்லவர்களா யிருத்தல் நலம். இப்படிப்பட்ட தகுதிகள் வாய்ந்த சமயபோதகர்கள் கவலையின்றித் தூய எளிய இல்வாழ்க்கை நடத்துதற்குப் போதுமான ஊதியமும் தரல்வேண்டும். இவர்கள் செய்யும் தொண்டுகளை மேற்பார்வையிடுதற்குக் கோயில்கள், மடங்கள், அ.நி.பா. கழகம் (H. R. E. Board) இவைகள் சேர்ந்து தக்க கழகங்களை அமைக்கலாகும். இப்பணிகளெல்லாம் செவ்வையாக நடைபெறுதற்கு வேண்டிய பணத்தின் பெரும் பகுதியைப் பெரிய ஆலயங்களும் மடங்களும் தரல்வேண்டும் என்று கேட்கலாம். அன்றியும் ஒவ்வோர் இந்துக் குடும்பமும் சமயப் பாதுகாப்புக்காக மிகச் சிறிய தொகையொன்றைத் தலைக்கட்டுவரியாகத் தரத் தாமே முன்வரல் வேண்டும். இஸ்லாமியர் **ஜக்காத்** என்னும் ஆண்டு வரி தருதலையும், கிறிஸ்துவர்கள் தம் மாதா

கோயிலுக்குக் காணிக்கை செலுத்துதலையும் கூர்ந்து நோக்கி, அம்முறைகளை இயன்றவளவு நாம் தழுவல் வேண்டும்.

மேற்காட்டியது போன்றதொரு திட்டத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, சிறுசிறு வட்டாரங்களில் இந்துக்கள் இப்பணியைத் தொடங்கி நடத்தி வரல்வேண்டும். ஊர்களிலும் சேரிகளிலும் இவ்வகைத்தொண்டு நடைபெறின், தீண்டாமைப்பேய் விரைவில் நீங்கிவிடும். சைவ சமயநெறி, "எவ்வுயிரும் நீங்கா(து) உறையும் இறைசிவன் என்(று), எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்று கட்டளையிடுகின்றது. அந்த அன்பைச் செயலில் காட்டச் சைவர் இனி ஒரு கணமும் தாமதித்தல் கூடாது. பிரமாண வாசகங்கள் நிறைந்த வெற்றுரவாரப் பேச்சுக்களாலும், ஆற்றலும் செயலும் அற்ற வெற்றழுகையினாலும் சைவத்தைக் காத்தல் முடியாது. பலவகை வசதிகளும் வினைசெயல்வகை யறிவும் உடைய புறமதங்கள் இந்துமதத்தை அடியோடு ஒழிக்கக் கட்டுப்பாடாய்த் தீர்க்காலோசனையுடன் வேலைசெய்து வருவதை உற்று நோக்கல் வேண்டும். சைவம் எம்முறையில் தீண்டாமையை விலக்க வல்லது என்பதனை மேலே கண்டோம். அம்முறையில் தொண்டாற்றிச் சைவ சமயத்தையும் நாகரிகத்தையும் காக்கல் வேண்டும்; எங்கும் சிவவொளியைப் பரப்பல் வேண்டும். இவ்வாறு தமிழகத்தையும் வையக முழுவதையும் வாழ்விக்க இறைவன் அருள்புரிவானாக.

---

## செய்திப் பகுதி

**ஜூலைமாதக் கூட்டம்** :—காரைக்குடியில் திருவாசக விழா 13-7-45லும், அதையடுத்து மறுதினம் சமாஜ ஜூலைமாதக் கூட்டம் 14-7-45லும் நடைபெற்றன. சமாஜக் கூட்டத்திற்கு திரு. அ. நடேச முதலியாரவர்கள் தலைமை வகித்தார்கள். திருவாளர்கள் - வீர. பெரியண்ணன், சிவ, பார்வதியம்மையார், முத்து வேங்கடாஜலமய்யர் முதலியோர் முறையே, "தேறலின் தெளிவு", "அமுதடியடைந்த அன்பர்", "ஆரூரரும் அருள்மொழிகளும்" என்பனபற்றி விரிவாகப் பேசினார்கள்.

இக்கூட்டத்தைச் சிறப்பாக நடத்தித்தந்த திருவாசக மடத்தினருக்குச் சமாஜ நன்றி உரியதாகுக.

**செப்டம்பர்மாதக் கூட்டங்கள்** :—முதல் கூட்டம் வடஆற்காடு ஜில்லா ஆம்பூரில் இந்து உயர்நிலைப் பள்ளியில் செப்டம்பர் 1, 2 தேதிகளில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தலைமையிலும், இரண்டாவது கூட்டம் பெங்களூர் அன்னவசந்தி சங்கத்தில் இராவ்பகதூர் க. அரங்கசாமி முதலியார் அவர்கள் தலைமையில் 14, 15, 16-9-45 தேதிகளிலும் நடைபெறும்.



**ஒரு தமிழ் முது புலவர்க்குப் பரிசளிப்பு** :— வாலாஜா நகரில் வசிக்கும் தமிழ் முது புலவர் - சைவத்திரு. கமலநாத முதலியாரவர்களுக்கு, அந்நகரத்துத் தேவார சபை மண்டபத்தில், அவர்கள் பழைய மாணவர்களது நன்முயற்சியால், 22-7-45-ல் ஒரு பரிசளிப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. 1000 திங்கள் கண்ட இப்புலவராம் பெரியாரைப் பல்லக்கில்வைத்து அன்பர்கள் ஊர்வலஞ்செய்து சபைக்குக் கொண்டுவந்தனர். பின்பு, சென்னைப் பிரபல வியாபாரியாகிய திரு இராமசாமி நாயுடு அவர்கள் தலைமையில், திரு. K. இராமலிங்க முதலியார் அவர்கள் B. A., முதலியோர் புலவரது கபடற்ற அன்பின் திறனையும் ஆழ்ந்த புலமையையும்பற்றி வியந்து பேசினர். திரு. ஆ. மா. சிவஞான முதலியார் (தமிழணங்கின் ஆசிரியர்) வாழ்த்துப்பா மாலை சூட்டினர். சுமார் 500 ரூபாய்கொண்ட பண முடிப்பை அன்பர்கள் அளிக்கப் புகும்பொழுது, தலைவர் 1000 திங்கள் கண்ட புலவர்க்கு ஆயிரம் ரூபாய் அளித்தலே முறையென்று கூறி, அத்தொகைக்குக் குறைவுபடுவதைத் தாமே அளிப்பதாகத் தெரிவித்து, அனைவருள்ளமும் இறும்பூதெய்தச் செய்தார். பெரியார் கமலநாத முதலியாரவர்கள் பல்லாயிரக்கணக்கான பாடல்களை மனப்பாடமாக உரைப்பவர்; முதிர்ந்த சிவபத்தர்; நீண்ட காலம் பாடசாலைத் தமிழாசிரியராக இருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கட்குப் பாடஞ் சொல்லிவந்தவர்; குழந்தையுள்ளம் படைத்தவர். இவரைப் போற்றியமைக்கு திரு. W. U. கண்ணன் முதலியார், ஜானகிராம முதலியார் முதலிய வாலாஜா நகர் அன்பர்கட்கு நம் பாராட்டுரியது. தமிழ்ப் பெரியார், சைவத்திரு. கமலநாதர் இன்னும் பல திங்கள் கண்டு இன்புற்று வாழ்ந்து இளைஞரை வாழ்த்த இறைவன் அருள்புரிவானாக.

---

### சைவ சித்தாந்த மகா சமாஜ

## முப்பத்தொன்பதாவது ஆண்டு அறிக்கை

(ஜூலை மாதத் தொடர்ச்சி)

**கணக்குகள்** :—39-ஆம் ஆண்டு 1-12-43 முதல் 30-11-44 வரை வரவு செலவு கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடு :

வரவு : சந்தா ரூ. 634, இணைத்தல் சந்தா ரூ. 23, ஆயுள் சந்தா ரூ. 10. ஞானியார் நிதி ரூ. 45. புத்தக விற்பனை 934-15-0 வட்டி ரூ, 51-3-3. தபால் ரூ, 23-10-0 பரிட்சைக் கட்டணம் ரூ. 39-4-0 நன்கொடை ரூ. 102-4-0. பாபநாசம் கோடை வகுப்பு ரூ. 1254. ஆரம்ப இருப்பு ரூ. 12-4-11 ஆகமொத்த வரவு ரூ. 3139-9-2.

**செலவு** :—தபால் 123-12-9 சில்லறை 7-13-0 இந்தியன் பாங்க் டிபாசிட் ரூ. 1886-3-3 சித்தாந்த அச்சுக்கூலி ரூ. 101-6-3 இதர அச்சுக்கூலி ரூ. 2-4-0 பாபநாசக் கோடை வகுப்பு ரூ. 1011-12-4 முடிவு இருப்பு ரூ. 6-5-7 ஆகமொத்தச் செலவு ரூ. 3139-9-2 சமாஜப் பொருள் இருப்பு : இந்தியன் பாங்கியில் ரூ. 4731-12-2.

**கூட்டங்கள்** :—இவ்வாண்டில் மாதக் கூட்டங்கள் 12-ம், நிர்வாக சபைக் கூட்டம் 8-ம், திருக்குற்றாலத்தில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றன. சமாஜ உறுப்பினர் தொகை ஆண்டு ஆரம்பத்தில் 316 ; இறுதியில் 380.

**நன்றி** :—இவ்வாண்டில் சமாஜப் பணிகளில் ஈடுபட்டுக் கைம்மாறு கருதாமல் தொண்டு புரிந்தவர்கட்கும் பொருள் உதவியவர்கட்கும், சொற்பொழிவாற்றியவர்கட்கும், வேறு பலவகைகளில் உதவி புரிந்தவர்கட்கும் மற்ற யாவர்க்கும் சமாஜம் நன்றி தெரிவிக்கிறது.

**வருஷத் திட்டம்** :—இவ்வருஷம் சமாஜத்திற்குக் கட்டிடம் பெறுவது முதற் கடமையாகும்.

**எங்கள் கனவு** :—சமாஜத்தின் தொண்டு விரிவடைதல்வேண்டும்; சிறப்புறல் வேண்டும். பற்பலர் இலவசத் தொண்டு செய்து வரல்வேண்டும்; நூற்றுக்கணக்கான மக்கள் அதில் ஊதியம் பெற்று வேலைசெய்தல் வேண்டும். சமாஜப் பள்ளிக்கூடங்கள், சமாஜ வைத்தியசாலைகள், சமாஜத் தொழிற்சாலைகள், திக்கற்றவர் இல்லம் முதலிய பல நடத்தல் வேண்டும்.

வறுமை அகல, அறிவு வளர, இருள் நீங்க, ஒழுக்கம் மேலோங்க, வாழ்க்கை பண்பட சமாஜம் தொண்டு செய்தல்வேண்டும். அதில் சைவ மக்கள் யாவரும், பரந்த நோக்குடைய பிறரும் பங்கெடுத்து உழைத்தல் வேண்டுமென்று கோருகிறோம். அம்மையப்பர் அருள்பாலிப்பாராக.

இங்ஙனம் : உத்தரவின்படி கா. இராமநாதன் செட்டியார்,
காரியதரிசி. 24—12—1944

189801

Edited & Published by S. Satchithanandam Pillai, B.A., L.T. for the Saiva Siddhanta Maha Samajam at 51, Thengur Chelvavinayagar Koil Street, Mylapore, Madras.
Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajam...



பாரத நாட்டிற் குடிபுகுந்த ஆரிய மக்கள், புலால் உணவின் பொருட்டுப் பெருமுயற்சி செய்தார்கள். புலால் உணவு தேடுவதே அவர்கள் வேலையா யிருந்தது என்றுங் கூறலாம். அதற்கென ஆடுமாடுகளைக் காப்பதிலும், வளர்ப்பதிலும், மேய்ப்பதிலும் அவர்கள் பொழுது கழியலாயிற்று. வேறு துறைகளில் அவர்கள் கருத்துப் படியாதிருந்தது.

அதுகண்ட அறிஞர் சிலர் ஒன்றுகூடிப் புலால் உணவின்மீது படிந்து கிடந்த தம்மவர் கருத்தை, வேறு துறைகளில் திருப்ப நினைந்து, புலால் உணவுக்குச் சில வரம்புகள் கோலினர். அவ்வரம்புகட் குட்பட்ட ஒன்றே வேள்வி என்பது. ஊன் உண்போர் நேரே ஒருயிரைக் கொன்று அதை உண்ணலாகா தென்றும், நெருப்பில் மந்திர பூர்வமாக வேள்வி செய்து ஊன் உண்ணல் வேண்டுமென்றும் சில வரம்புகள் கோலப்பட்டன. முறைகளும், கிரியைகளும், பிறவும் பெருக்கப்பட்டன. இவ்வரம்பு முறைகள் அம்மக்கட்கு ஊனுணவைச்சுருக்கின. "சிறுஊனுக்கு எவ்வளவு உழைப்பு" என்னுஞ் சோர்வு அம்மக்களுக்கு ஏற்பட்டது. இதனால் அவர்கள் முயற்சி வேறு துறைகளில் சென்றது.

இவ்வாறு தோன்றிய வேள்வியால் நாளடைவில் மக்களுக்குக் கடவுள் பித்தேறி விட்டது. வேள்வி செய்தால் தேவர்கள் மகிழ்ச்சி யுறுவார்களென்றும், மழை பெய்யுமென்றும், வாழ்வுக்கு நலனுண்டு என்றுங் கருதப்பட்டன. இந் நம்பிக்கை நாளுக்குநாள் மக்களிடை உறுதிப்பட்டது. பின்னை இவ்வினைக்கென ஒரு சிலர் பிரிக்கப்பட்டனர். இவரது வேலை எந்நேரமும் வேள்வி செய்வதாக முடிந்தது. கடவுள் பெயரால், நாட்டுக்கு நலன் என்னும் நம்பிக்கையால், உயிர்கள் நெருப்பில் வதைக்கப்பட்டன. இக்கொலைச் செயலை நிறுத்த விருஷபதேவர், மஹாவீரர், புத்தர், திருவள்ளுவர் முதலியோர் அவ்வப்போது பெரு முயற்சி செய்தனர்.

இப்பேரருளாளர் உழைப்பால் வேள்வியின் உயிர்க் கொலை அருகிற்று. ஆனால் வேள்வி என்பது நிற்கவில்லை. உயிர்க்கொலை வழி நிகழ்ந்து வந்த வேள்வி அவ்வழி நிகழா தொழிந்தது. வேள்விக்கென நெல் உளுந்து முதலிய தானியங்கள் கொள்ளப் பட்டன.

பின்னே எழுந்த வேதாந்தம் வேள்விக்கு வேறு பொருள் கூறத் தொடங்கிற்று. வேள்வியில் ஆடு மாடு முதலியவற்றைக் கொல்லுதல் என்று சொல்லப்படுவது அவ்வுயிர்களைக் குறிப்பதன்று என்றும், ஜீவபோதத்தைத் தடிவதையே அது குறிக்கிறது என்றுங் கொள்ளப்பட்டன. எங்ஙனே ஊன் வேள்வி அருகி, ஊனில் வேள்வி பெருகிற்று. இவ்வளர்ச்சிக்குக் காரணம் மனிதனிடத்துள்ள பகுத்தறிவாகும்.

பின்னே நாளேற நாளேற மனிதன் அன்புவழிக் கடவுளைப் போற்றத் தொடங்கினான். சடங்குகள், கிரியைகள் முதலியவற்றை அறிஞர் வெறுக்கலாயினர். எவ்வுயிரையும் தம்மைப்போல் கருதி, அவைகள் மாட்டுச் செந்தண்மை பூண்டொழுகுவது கடவுள் வழிபாடு என்று அறிஞர் கொண்டனர். இக்கொள்கை இந்நாளில் யாண்டும் பரவி வருகிறது. இந்நாளில் கடவுள் பெயரால் உயிர்க்கொலை வேள்வி செய்தல் எத்தகை அறியாமை! எத்தகை அநாகரிகம்! எத்தகை இழிவு!

ஒடுங்கி மாண்டொழிந்த ஊன் வேள்வி மீண்டும் மூலை முடுக்குகளில் உயிர் பெற்றெழுகிறது. இப்பொழுது பலவிடங்களில் அவ்வேள்வி செய்யப்படுகிறது; அதுவும் பிடிவாதமாகச் செய்யப் படுகிறது. வைதிகம் பிடிவாதமாகி விட்டது.

இந்நாளில் கொலை வேள்வி எற்றுக்கு எனில் வேதப் பிரமாணம் காட்டப்படுகிறது. அவ்வேதம் எந்நாளையது? அந்நாளில் மனிதன் நிலை எவ்வாறிருந்தது? அந்நாளைய



வழக்கத்துக்குரிய ஒன்றை உறுதிப்படுத்த வேதப் பிரமாணம் காட்டுவது அறிவுடைமையா? பின்னே புத்தர் திருவள்ளுவர் முதலிய பெரியோர்கள் தோன்றி, அன்பு நெறியை அறிவுறுத்திப் போந்தார்கள். தன்னுயிரைப்போல மன்னுயிரையும் கொண்டு வழிபடும் அன்பு நெறி வளர்ந்தோங்கி வரும் இந்நாளில் கடவுள் பெயரால் உயிர்க்கொலை நிகழ்த்துவதன் நோக்கமென்னை?

இக்கொலைக்குத் தத்துவார்த்தங்கள் சொல்லச் சிலர் புறப்படுவர். தத்துவார்த்தம் எல்லாவற்றிற்கும் ஏலாது. உயிரைக் கொலை செய்து விட்டுத் தத்துவார்த்தம் பேசுவது இழுக்கேயாகும். சித்திரவதைக்கும் தத்துவார்த்தமா? கொடுமை! கொடுமை!

யாகத்தில் கொல்லப்படும் ஆடு முத்தி அடைகிறது என்ற சமாதானம் சொல்லப்படுகிறது. இதற்குப் பிரமாணமும் காட்டப்படுகிறது. பிரமாணம் எதற்கு இல்லை? எல்லாவற்றிற்கும் பிரமாணம் உண்டு. பிரமாணங்கட்கு உலகம் அடிமைப்பட்டது போதும்! போதும்! அவரவர் தத்தம் செயலுக்கு ஆதரவாக நூல்களை எழுதிவைப்பர். அந்நூல்கள் தெய்வமொழியாகவும் முனிவர் மொழியாகவும் பிற்காலத்தில் போற்றப்படுவது வழக்கம். கொலைஞர், கொலை நூல் எழுதுவது இயல்பு. கொலைஞர்க்கு அது பிரமாணமாகுமன்றோ?

'புலால் நாற்றம் வீசும் நாடு' என்று சொல்லப்படும் மேல் நாட்டிலேயே இப்பொழுது புலால் மறுப்புக் கிளர்ச்சி தோன்றியிருக்கிறது. உலகம் முழுவதும் அப்போறம் விரைந்து வளர்ந்து வருகிறது. புலால் உண்போர் பலர் புலாலை ஒழித்து வருகிறார். புலால் உண்பவரும் நன்னாட்களில் புலால் உண்பதில்லை. 'உயிர்க்கொலை கடவுள் நெறிக்கு மாறுபட்டது' என்னும் உண்மை, ஏறக்குறைய எல்லா

ரிடத்திலும் பரவியிருக்கிறது. இவ்வேளையில் 'வேதம்' 'வேதம்' என்று கொலை வேள்வி செய்வது அறிவுடைமை யாகுங்கொல் !

பண்டை நாளில் மந்திர சக்தியால் ஆடு மாடுகள் தாமே வீழ்ந்து பட்டன என்று சொல்லப்பட்டது. அது மெய்யோ பொய்யோ அதைப்பற்றிய ஆராய்ச்சி ஈண்டு வேண்டுவ தில்லை. அந்நாளில் மந்திர சக்தியால் கொலை நடந்ததாகவே வைத்துக்கொள்வோம். அக்கொலையும் அந்நாளில் அருளாள ரால் மறுக்கப்பட்டது ஈண்டு கவனிக்கற்பாலது. இந்நாளில் மந்திர சக்தியுமில்லை ; மற்றச் சக்தியுமில்லை. மூர்க்க சக்தி யால் உயிர்கள் சித்திரவதை செய்யப்படுகின்றன.

எளிய ஆடு - அம்மா அம்மா என்று கதறும் ஏழை ஆடு - சித்திரவதை செய்யப்படுகிறது ! கொலைஞன் ஒரு நொடிப்பொழுதில் ஆட்டை வெட்டிவிடுகிறான். அந்தோ ! வேள்விக் கொலையோ ! எழுதவும் கை நடுக்குறுகிறது ! சித் திரவதை ! சித்திரவதை ! வாயில்லாப் பிராணி வதையைக் கேட்க அரசில்லையா ? உயிர்கொலையைத் தகையச் சங்கங்க ளில்லையா ? ஜீவகாருண்ய சங்கங்கள் என்ன செய்கின்றன ? ஆண்டவனே ! உன் படைப்பு, உன் பெயரால் சித்திரவதை செய்யப்படுகிறது ! உனக்குக் காணக் கண்ணில்லையா? கேட்கக் காதில்லையா? உடன் கட்டை ஏறுதலை நிறுத்திய அர சாங்கம் - செடலாடுதலைத் தகைந்துவரும் அரசாங்கம் என்ன செய்கிறது ? அருளாளர்கள் - ஆறறிவுடையமக்கள் - வாயில்லா ஏழைப்பிராணிகட்காகப் போராடல் வேண்டாமா? அருளாளர்களே ! ஆறறிவுடைய மக்களே ! அறவழியில் போராட எழுங்கள் ! எழுங்கள் !

இக்கொலையைத் தடுக்க மக்கள் பிறவி தாங்கியுள்ள ஒவ்வொருவர்க்கும் உரிமையுண்டு. இதில் பிராமணர் பிரா மணரல்லாதார் பிணக்கு வேண்டுவதில்லை. புத்தர் திரு,